தலைமைப் பொறியாளர் அலுவலகம், வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், நீர்வளத் துறை, சேப்பாக்கம், சென்னை—5.

முன்னிலை: பொறி. செ.க.லதா, B,E.,
தலைமைப் பொறியாளர், வ.ஆ. (ம) க.ஆ., நீ.வ.து.,

செயல்முறை ஆணை எண்.இ1 / 4191 / 2023—6, நாள்: 29.02.2024

பொருள்:- பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV- ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு பணி வேட்பாளர்களை தெரிவு செய்து பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – குறித்து.

பார்வை:- 1. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீவது., சென்னை அவர்களின் செ.மு.ஆ. எண். எஸ்.3(3) / 35336 / 2023, நாள். 22.09.2023.

2. இவ்வலுவலக செ.மு.ஆ.எண்.இ1 / 4191 / 2023—1, நாள்.03.10.2023.

*******

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV- ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு பணி வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, பார்வை 1—ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீவது., சேப்பாக்கம், சென்னை—5 அவர்களின் செயல்முறை ஆணையின் வாயிலாக இவ்வலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து பார்வை 2 இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின் வாயிலாக செல்வி.B.ஸ்ரீவித்யா, 05.10.2023 முற்பகல் முதல் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 28—ன்படி மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகள் 32 (a) (i) -ன்படியும், இந்த நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு தொகுதி IV-ன் தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடனும் செல்வி. B. ஸ்ரீவித்யா, இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 05.10.2023 முற்பகல் முதல் அவரது பணியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்ட செல்வி. B. ஸ்ரீவித்யா, இளநிலை உதவியாளர் அப்பதவியில் தொடர்ந்து மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டுகளில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது. மேலும் தனியர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

ஒப்பம்/— செ.க.லதா,29.02.2024
தலைமைப் பொறியாளர், வ.ஆ (ம) க.ஆ.,நீவது., செ—5

பெறுநர்

செல்வி. B. ஸ்ரீவித்யா, இளநிலை உதவியாளர்
தலைமைப் பொறியாளர் அலுவலகம், வ.ஆ.(ம)க.ஆ.,
நீவது., சேப்பாக்கம், சென்னை—5.

தலைமைப் பொறியாளர் சார்பில்,
வ.ஆ (ம) க.ஆ ., நீவது., சென்னை—5.

29/2/2024